# அம்பலாங்கொடை நகர சபை
# காலி மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 29 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஒக்தோபர் 28 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, அம்பலாங்கொடை நகர சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அம்பலாங்கொடை நகர சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு களஞ்சியத்தில் எஞ்சியிருந்த மின்சாரப் பொருட்கள், காகிதாதிகள் மற்றும் பொதுவான இருப்புக்கள் மீள் கணிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

வரையிலும் நிலுவைக் கடன் தவணைப்பணம் ரூபா 720,277 ஆக இருந்ததுடன் செலுத்த வேண்டிய வட்டித்தொகை ரூபா 1,319,902 ஆக இருந்தது.

(ii) 03 ரேலர்களைக் கொள்வனவு செய்வதற்காக 1998 யூன் 04 ஆந் திகதி பெறப்பட்ட ரூபா 115,200 தொகையான கடன் பணத்திற்காக எவ்வித தவணைப் பணமும் செலுத்தப்படாதிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நிலுவை கடன் தவணைப் பணம் ரூபா 69,120 ஆக இருந்ததுடன் செலுத்த வேண்டிய வட்டிப் பணம் ரூபா 124,403 ஆகும்.

(iii) பஸ் நிலைய செயற்திட்டத்திற்காக 1998 திசெம்பர் 31 ஆந் திகதி பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 32,542,135 தொகையான கடன் பணத்திற்காக 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 14,719,631 தொகையான கடன் தவணைப் பணம் மற்றும் ரூபா 21,044,088 தொகையான வட்டி என்பன செலுத்த வேண்டியிருந்தன.

### 2.4.4 திட்டமிடல்

(அ) 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர் /2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் ஆகக் குறைந்தது 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிராததுடன் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 மார்ச் 24 ஆந் திகதி 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.5 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் 2006 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய பீஈ/எப்/எஸ்/4(xiii) ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சுச் செயலாளரின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உருவாக்கப்பட்டிருக்கவில்லை.